பக்கங்கள்: மொத்தம் 50

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 09 ஞாயிற்றுக்கிழமை (25.12.2011)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 029



11

ஏழு வருடங்களின் பின் கிடைத்த பிள்ளை



03

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் ஊதி பெருப்பிக்கும் அரசு



14

கனவு பலிக்கப் போராடுவோம்

# பேச்சு மூலமாக தீர்வு காணக் கிடைத்த பொன்னான வாய்ப்பை நழுவ விடாதீர்!

## அரசு - கூட்டமைப்பு இரு தரப்பினரிடமும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்து

கொழும்பு, டிசெம்பர் 25

இனப்பிரச்சினைக்குப் பேச்சின் ஊடாக தீர்வு ஒன்றைக் காணக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை அரசு நழுவவிடக் கூடாது என்று வலியுறுத்தி இருக்கிறது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ். அதே வேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொண்டு நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட ஒத்துழைக்க வேண்டும் என்றும் அது தெரிவித்துள்ளது. "அரசு வெற்றிக் களிப்பில் தீர்வொன்றை முன்வைக்க முற்படலாகாது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஓரளவு நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிப்பது அரசின் உண்மையான கரிசனையை அறிந்து கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்" என்று கட்சித் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகளின் ஊடாகத் தீர்வு காண்பதில் நம்பிக்கை கொண்ட ஓர் அரசியல் கட்சி முஸ்லிம் காங்கிரஸ். அண்மைக் காலமாக ஊடகங்களில் அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வெளியிட்டு வரும் அறிக்கைகள் தொடர்

பக் 15

## உயர்தரப் பரீட்சை முடிவுகள் இன்று

வலி.வடக்கு, டிசெ.25

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும் என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார். கடந்த ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற பரீட்சை முடிவுகள் இன்று வெளியிடப்படுவதுடன், பகல் 10 மணி முதல்

பக் 15




## சனத்தொகை கணக்கெடுப்பு குடாநாட்டில் பெப்ரவரியில்

யாழ்ப்பாணம், டிசெ. 25

30 வருடங்களின் பின்னர் யாழ். மாவட்டத்தில் புள்ளி விவரவியல் திணைக்களத்தினால் சனத்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் மார்ச் 19 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் வீடுவீடாக இந்தக் கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாவட்ட செயலக புள்ளி விவரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

பக் 15

## சிறப்பாக நடந்த நத்தார் ஆராதனைகள்





யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் ஆராதனை.

நாடு முழுவதும் நேற்று நள்ளிரவு கிறிஸ்மஸ் ஆராதனைகள் மிகவும் அமைதியாக நடைபெற்றன. இயேசு பாலகனின் பிறப்பைக் குறிக்கும் நத்தார் பெருவிழாவை முன்னிட்டு தேவாலயங்கள் தோறும் பக்தர்கள் கூடி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

வடக்கிலும் கிறிஸ்து பிறப்பையொட்டிய நள்ளிரவு திருப்பலி வழிபாடுகள் எதுவித கெடுபிடிகளும் இன்றி நடைபெற்றன.

யாழ்.நகரில் யாழ். மரியன்னை தேவாலயத்தில் ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நள்ளிரவு திருப்பலி இடம்பெற்றது. நகரில் ஏராளமானவர்கள் தேவாலயங்களில் கூடியிருந்தனர். பாலகன் இயேசு பிறந்த நாளை கிறிஸ்தவ மக்கள் வெடி கொளுத்தி குதூகலமாகக் கொண்டாடினர். (ஒ-15)

## நடைமுறைச் சாத்தியமான தீர்வை நோக்கியே அரசுடனான பேச்சு கட்டமைக்கப்பட்டுள்ளது

### மன்னார் ஆயருக்கு சம்பந்தன் பதில்

கொழும்பு, டிசெ.25

ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நடைமுறை சாத்தியமானதும் நிலையானதும் பெரும்பான்மையான எமது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியதுமான அரசியல் தீர்வை நோக்கியதாகவே அரசுடனான பேச்சு கட்டமைக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு, கிழக்கு என்ற பெயரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக அதில் முதலாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு அனுப்பி

பக் 15

## ஆராய்கிறோம் என்றால் ஆராய்கிறோம்தான் ஆணைக்குழு அறிக்கை பற்றி ஐ.நா. கருத்து

கொழும்பு, டிசெ. 25

"நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து வருகின்றோம் என்று கூறினால் ஆராய்ந்து வருகின்றோம்தான்; அதில் கேள்விகளுக்கு இடமில்லை" என்று உறுதியாகப் பதிலளித்தார் ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலரின் பேச்சாளர் மார்ட்டின் நெர்சகி.

ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதை விட ஐ.நாவுக்கு வேறுபல வேலைகள் இருக்கின்றன

பக் 15

## நடுக்கடலில் தத்தளித்த ஆறு இந்திய மீனவர் வடமராட்சி கிழக்கில் நேற்று கரை ஒதுங்கினர்

மருதங்கேணி ஆழியவளைப் பகுதியில் 'ட்றோலர்' ஒன்றுடன் ஆறு தமிழக மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் கரையொதுங்கினர். இயந்திரக் கோளாறு காரணமாகவே இவர்கள் கரையொதுங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

தமிழகம், நாகைப்பட்டினத்தைச் சேர்ந்த குறித்த ஆறு மீனவர்களும் கடந்த 19ஆம் திகதி கடல்தொழிலுக்காக பெரிய நாயகி மாதா என்ற படகில்புறப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் 20 ஆம் திகதி நடுக் கடலில்

பக் 15

உங்களது அனைத்து வகையான பாவனை (Bill, Reload) கட்டணங்களை ஒரே இடத்தில் செலுத்திக் கொள்ளுங்கள்!

Dialog · Sri Lanka Telecom · airtel · etisalat · Sri Lanka Telecom Mobitel · (CEB) · WESTERN UNION MONEY TRANSFER · HSBC

வெளிநாடுகளில் இருந்து உங்கள் உறவுகளிடம் இருந்து வரும் பணத்தை WESTERN UNION பணப்பரிமாற்ற முறை மூலம் கணப்பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் அனைத்து சேவைகளையும் தாமதம் இன்றி இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள் அருகில் உள்ள

சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சி அறைகளை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம் மானிப்பாய் நெல்லியடி சாவகச்சேரி கிளிநொச்சி சங்கானை

SINGER EXPRESS PAY

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான காலநிலை நிலவும் சாத்தியமுள்ளது.

# தலைமன்னாரில் வெள்ளப்பெருக்கு பெருமளவில் மக்கள் இடம்பெயர்வு

மன்னார், டிசெ. 25

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் பெய்த அடை மழை காரணமாக தலைமன்னார் கிராமம் மற்றும் தலைமன்னார் பியர் ஆகிய பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

குறித்த கிராமங்களில் உள்ள பல வீடுகளினுள் மழை வெள்ளம் வழிந்தோடாது தொடர்ந்தும் தேங்கியுள்ளது. இதனால் நூற்றுக்கணக்காண குடும்பங்கள் இடம் பெயர்ந்து உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த மக்களின் உடைமைகள் பலவும் மழை நீரில் மூழ்கி சேதமடைந்திருப் பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ள நீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையும் மந்த கதியிலேயே இடம் பெற்று வருவதாக அக்கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட தலை மன்னார் கிராமம், தலை மன்னார் பியர் பகுதிகளைச் சேர்ந்த மக்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன் போது பாதிக்கப்பட்ட மக்கள் தமது பிரச்சினைகள் மற்றும் பாதிப்புக்கள் என்பவற்றை அவரிடம் முன்வைத்தனர். குறிப்பாக தங்கள் பகுதிகளில் தேங்கியுள்ள வெள்ள நீரை உடன் வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை அவர்கள் விடுத்தனர். (ங-601)

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 25

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக யாழ்ப்பாணம் முதல் அம்பாந்தோட்டை வரையிலான கடற்பகுதிகளில் கடும் மழை மற்றும் கடும் காற்று வீசும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நேற்று நண்பகல் 12 மணி முதலான 24 மணித்தியாலங்களுக்கான காலநிலை தொடர்பிலேயே அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

தாழமுக்கமானது தற்போது பொத்துவில் நகரிலிருந்து 550 கிலோ மீற்றர் கடற்பரப்பில் நிலைகொண்டுள்ளது. இதனால் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்கரை பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென எச்சரித்துள்ளது.

இந்தக் காலநிலை மாற்றத்தால் குறித்த கடற்கரை பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்வது சிறந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, வட மத்திய, மத்திய, ஊவா ஆகிய மாகாணங்களில் தொடர்ந்தும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (15)

# பன்னங்கண்டிப் பாலத்தில் விபத்து சிறுவன் உடல் நசுங்கிச் சாவு

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பாலத்தில் தனியார் பஸ் சில்லில் நசிபட்டு சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பன்னங்கண்டி, மருதநகர் பகுதியில் வசிக்கும் பாக்கியநாதன் லக்ஸன் (வயது-13) என்ற சிறுவனே இந்தச் சம்ப வத்தில் உயிரிழந்தான். இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

அண்மையில் பெய்த மழைகாரணமாக குறித்த சிறுவனின் குடும்பம் இடம்பெயர்ந்து இடைத் தங்கல் முகாம் ஒன்றில் வசித்து வருகிறது.

இந்த நிலையில் நேற்றுக் காலை தண்ணீர் எடுப்பதற்காக குறித்த சிறுவனும் தாயாரும் துவிச்சக்கரவண்டியை உருட்டிக்கொண்டு, பனங்கண்டிப் பாலத்தின் வழியாகச் சென்றுகொண்டிருந்தனர். அப்போது இராமநாதபுரத்தி லிருந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று பாலத்தில் வந்து கொண்டிருந்த சிறுவனைப் பந்தாடியது. இதன்போது பஸ்ஸின் சில்லு சிறுவனின் மேல் ஏறியதால், அவன் அந்த இடத்திலேயே உடல் நசுங்கி, துடிதுடித்து உயிரிழந்தான்.

சம்பவ இடத்துக்கு விரைந்த கிளிநொச்சி மாவட்ட நீதவான் உரிய விசாரணைகளை மேற்கொண்டார். அதன்பின் சிறுவனின் சடலம் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு உடற்கூற்றியல் பரிசோதனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத ஒருவரே குறித்த தனியார் பஸ்ஸை செலுத்திவந்துள்ளார். இதனால் பஸ்ஸின் சாரதியும், உரிமையாளரும் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது, இவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ங-15-426)

## மரணமானவர் 'உயிர்த்தெழுந்தார்'

கொஸ்கம வைத்தியசாலையில் உயிரிழந்து விட்டார் என்று கூறப்பட்ட ஒருவர் சில மணி நேரத்தில் உயிர்த்தெழுந்தார்.

இதயத்துடிப்பை பரிசோதித்த கொஸ்கம வைத்தியர்கள், குறிப்பிட்ட குடும்பஸ்தர் மரணமானார் என்று உறுதிப்படுத்திக் கொண்டு, சடலத்தை வெள்ளைத் துணியினால் மூடி ஒதுக்குப் புறமாக வைத்திருந்தனர்.

ஆனால் உறவினர்களுக்கு ஏனோ சந்தேகம் வந்து விட்டது! சடலத்தை அவசர, அவசரமாக அண்மையாகவுள்ள அவிசாவளை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு அவருக்கு (சடலத்துக்கு) செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டது. அவருக்கு வந்தது 'உயிர்'!

சில மணி நேரத்தில் அவர் வாய் திறந்து பேசினார். உறவினர்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். இரண்டு பிள்ளைகளின் தந்தையான 52 வயதுடைய நபரே இவ்வாறு உயிர் பிழைத்தவர் ஆவார். (ஒ)

# வலி.வடக்கின் பல பகுதிகளுக்கு சரவணபவன் எம்.பி விஜயம்

## மாணவர்களுக்கு உபகரணங்களையும் வழங்கினார்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுமுன் தினம் வலிகாமம் வடக்கு பிரதேசத்திற்கு நேரடியாகச் சென்று பல்வேறு உபகரணங்களை வழங்கியதுடன் பிரதேச மக்களையும் சந்தித்து அவர்களது தேவைகளையும் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

இவர் வலி.மேற்கு பிரதேச பிரிவின் 25 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த கோயில்கள், லயன்ஸ்கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சன சமூக நிலையங்களுக்கு உபகரணங்களை வழங்கியதுடன் மக்கள் சந்திப்புக்களையும் மேற்கொண்டுள்ளார்.

நாடாளுன்ற உறுப்பினர் நேற்றுமுன்தினம் காலை சங்கானை அம்பாள் சனசமூக நிலையத்திற்கு சென்று அப்பிரதேசத்தில் உள்ள வறிய மாணவர்கள் 30 பேருக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.

சங்கரத்தை மாதர் சங்கத்திற்குச் சென்று சங்கத்திற்கென ஒரு தையல் இயந்திரத்தை வழங்கியுள்ளார்.

பன்னாகம் அம்பாள் கலைமன்றத்தில் இவ்வாண்டு க.பொ.த சாதாரண பரீட்சையினை முடித்துக்கொண்ட அப்பிரதேச மாணவர்களைச் சந்தித்து உயர் தரத்தில் படிக்கக் கூடிய எவ்வாறான பாடங்களைத் தெரிவுசெய்ய வேண்டும் என்பது தொடர்பான உரு கலந்து ரையாடலை நடத்தியதுடன் மன்னார் மாவட்டத்திற்கு சுற்றுலா ஒன்றினை மேற்கொள்ளுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் அவர் களுக்கு இலவச ரிக்கெட்டுக்களையும் வழங்கியுள்ளார்.

சுழிபுரம் கடற்தொழிலாளர் சங்கத்தில் மக்கள் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டதுடன் மீள்குடியேற்றம் சம்பந் தமாக கலந்துரையாடியதுடன் திருவடி நிலை அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

சுழிபுரம் பெரிய புலம் விளையாட் டுக் கழகத்திற்குச் சென்று விளையாட்டு உபகரணங்களையும் வழங்கியுள்ளார்.

சுழிபுரம் காந்திஜி சனசமூக நிலை யத்திற்குச் சென்று அப்பிரதேச மக் களைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் அவர்களது மீள்குடியேற்றம் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

சித்தங்கேணி துறட்டிப்பனை சன சமூக நிலையத்தில் மக்கள் சந்திப்பு ஒன்றினையும் மேற்கொண்ட அவர் களது பிரச்சினைகளையும் கேட்டு அறிந்து கொண்டார்.

மூளாய் மனிதவள அபிவிருத்திச் சனசமூக நிலையத்தில் மக்கள் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டள்ளார். இங்கு அவர்களது தேவைகளையும் கேட்டு அறிந்து கொண்டுள்ளார்.

பொன்னாலையில் மீள்குடியேற்றம் தொடர்பான மக்கள் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

பொன்னாலை பிள்ளையார் கோயிலில் திருவடி நிலை அபிவிருத்திச் சங்கத்தினையும் ஆரம்பித்து வைத்துள்ளார்.

சங்கரத்தை வை.எம்.எச்.ஏயில் மக்கள் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டு அவர்களது தேவைகளை கேட்டு அறிந்து கொண்டுள்ளார்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தில் மக்களைச் சந்தித்ததுடன் கண் பரிசோதனை உபகரணம் ஒன்றினை வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளார்.

# நிகழ்வுகள் இன்று

**இறுவட்டு வெளியீடு**

குந்தியின் செல்வன் புராண இசை நாடக இறுவட்டு வெளியீடும் கலைஞர் கௌரவிப்பும் பிற்பகல் 3 மணிக்கு தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. தீவக கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகர் மு.கேச வன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் கலந்து கொள்வார். (த-313)

**நூல் வெளியீடு**

கு.கமலேஸ்வரனின் "புலமை யும் வறுமையும்" நூல் வெளியீட்டு விழா பிற்பகல் 3 மணிக்கு மருதனார் மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தில் சிவஸ்ரீ சுந்தரரேஸ் வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (த-313)

**ஒளிவிழா**

கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் ஒளி விழா பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

* * *

வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் ஒளிவிழா காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் அமைந்துள்ள நிறுவனத்தில் நிறுவனத் தலைவர் த.செந்தில்குமார் தலைமையில் நடைபெறும். (த- 313)

* * *

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தின் ஒளிவிழா மாலை 5 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறும். இதில் மறைக்கல்வி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (த- 313)

**பொதுக்கூட்டம்**

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பி.ப 4 மணிக்கு கொக்கு வில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

# மக்களைப் பிரிக்கின்ற தடைகள் உடைத்தெறியப்பட வேண்டும்!

### நத்தார் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ.25

இயேசு கிறிஸ்துவின் அன்பு ஏழைகளுடனும் சாதாரண மக்களுடனும் பலமான பிணைப்பைக் கொண்டுள்ளது. அவ் அன்பு இவ்வுலகில் வாழும் எல்லா உயிர்களையும் தழுவியது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள நத்தார் பண்டிகை வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அந்த வாழ்த்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று இயேசு கிறிஸ்து பிறந்தநாளைக் கொண்டாடும் எல்லோருடனும் நத்தார் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மனித குலத்திற்கு நத்தார் கதையில் மிகப்பெரும் அர்த்தங்கள் நிறைந்துள்ளன. பெத்லஹேமில் தொழுவமொன்றில் இடம்பெற்ற இயேசு கிறிஸ்துவின் பிறப்பானது அன்பு-பணிவு என்பவற்றை ஞாபகமூட்டுகின்றது. இயேசு பாலகர் பிறந்து- தீவனத் தொட்டியொன்றில் வைக்கப்பட்டிருந்ததும் இடையர்களே இயேசுவுக்கு முதல் முதலில் காணிக்கை செலுத்தியதும் கிறிஸ்துவின் அன்பு ஏழைகளுடனும் சாதாரண மக்களுடனும் பலமான பிணைப்பைக் கொண்டுள்ளது என்பதையும் அவ்வன்பு எம்முடன் இவ்வுலகைப் பகிர்ந்து கொள்ளும் ஏனைய எல்லா உயிரினங்களையும் தழுவியது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

அன்பும் ஈகையும் நிறைந்த இந்த நத்தார் பண்டிகைக் காலப் பகுதியில் இனம்- சமயம்- குலம்- செல்வம்- சமூக நிலை என்ற வேறுபாடுகளால் மக்களைப் பிரிக்கின்ற தடைகளை உடைத்தெறிய வேண்டும் என கிறிஸ்தவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

முதல் நத்தாருடன் வந்த இப் பூவுலகுக்கான சமாதான செய்தியும் எல்லோருக்குமான நல்லெண்ணச் செய்தியும் வெறுப்பு - பயங்கரவாதம்- போட்டிமனப்பான்மை- பொருளாதாரப் பிரச்சினைகள்- காலநிலை மாற்றம்- உணவுப் பாதுகாப்பின்மை போன்ற பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வரும் இன்றைய உலகுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.



இயேசு கிறிஸ்துவின் பிறப்புடன் மீண்டும் ஏற்றப்பட்ட அன்பெனும் தீபத்தைக் கொண்டு சமூகத்தின் எல்லா தடைகளும் நீங்கவேண்டும் என்பதே இந்த நல்லெண்ணக் காலப்பகுதியில் கிறிஸ்தவர்கள் செய்யும் பிரார்த்தனைகளின் எதிர்பார்ப்பாகும்.

இந்தப் பிரார்த்தனைகள் எல்லாம் நிறைவேற வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இலங்கை வாழ்கிறிஸ்தவர்களுக்கு மகிழ்ச்சி- சமாதானம்- நல்லெண்ணம் நிறைந்த ஒரு நத்தாருக்காக எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# பாலனின் பிறப்பு எமக்கு மீட்சியைத் தரட்டும்

### நத்தார் செய்தியில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு



துயரின் பிடியில் இருந்து இன்னமும் மீளமுடியாமல் தவிக்கின்ற தமிழ் மக்களுக்கு பாலன் பிறப்பு ஒரு மீட்சியைத் தரும் நாளாக அமைய வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் இந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தவை வருமாறு:

போர் முடிவுற்ற பின்னராவது தம்முடைய வாழ்வில் நிம்மதி பிறக்கும் என்றே தமிழ் மக்கள் நம்பியிருந்தனர். தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு நிற்கும் தம்வாழ்வில் இனியாவது வசந்தம் வீசும் என எண்ணினர். ஆனால் அதற்கு எதிர் மாறாகவே எல்லாம் நடைபெறுகின்றன.

அரசு தொடர்ந்தும் இனவாத சிந்தனையுடனேயே தமிழ் மக்களை நோக்குகிறது. குறைந்தபட்ச தீர்வினைத் தருவதற்குக் கூட அரசு தயங்குகின்றது. காணி, பொலிஸ் அதிகாரமற்ற பொம்மை ஆட்சியையே தருவதற்கு ஆட்சியாளர்கள் முனைகிறார்கள். அத்துடன் தமிழ் பிரதேசங்களில் உள்ள எந்தவொரு இராணுவ முகாமையும் அகற்ற முடியாது எனவும் திட்டவட்டமாக அரசு அறிவித்து விட்டது. இதனால் தமிழ் மக்களிடம் எஞ்சியிருந்த நம்பிக்கைக் கனவுகளும் சிதறிச் சின்னாபின்னமாகி விட்டன.

தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது மாற்றாந்தாய் மனப்பான்மையோடு அரசு நடந்து கொள்வதால் அவர்கள் வேறு தெரிவுகளை நோக்கியே தள்ளப்பட்டு வருகிறார்கள். மக்களின் வாழ்வு மலர்வதாக அரசு அறிவித்த போதிலும் இன்னமும் ஏராளமான மக்கள் மீள் குடியேற்றப்படாமல் அகதி வாழ்வுக்குள் அவதியுறுகின்றனர். தடுப்பு முகாம்களில் இளைஞர், யுவதிகள் விடுவிக்கப்படாமல் உள்ளனர். சிறைகளில் எந்தவித விசாரணைகளும் இன்றி அரசியல் கைதிகள் சிறைப் பறவைகளாக முடக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் காணாமற் போகின்ற சம்பவங்களும், கொலை கொள்ளைகளும் தமிழ்ப் பகுதிகளில் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. இதனால் போர்க் காலத்தில் இருந்ததை விடவும் மக்கள் இன்னமும் பீதி நிறைந்த வாழ்வுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் தமக்கான மீட்பரைத் தேடி தினமும் பிரார்த்திக்கின்றனர்.

எனவே துயரின் பிடியில் இருந்து இன்னமும் மீள முடியாமல் தவிக்கின்ற தமிழ் மக்களுக்கு பாலன் பிறப்பு ஒரு மீட்சியைத் தரும் நாளாக அமைய வேண்டும் என்று இந்தநாளில் பிரார்த்திப்பதுடன் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்றார்.

# சகவாழ்வை மதிப்போர் இதயங்களில் இயேசு பாலன் ஜீவிக்கின்றார்!

### நத்தார் செய்தியில் பிரதமர்

சகவாழ்வு மற்றும் சமவுரிமை என்பவற்றிற்கு உதாரணமாக விளங்கும் இயேசு நாதரின் பிறந்த தினத்தை நினைவுகூரும் இந்தப் புனித நத்தார் தினத்தினை முன்னிட்டு இலங்கை வாழ் மற்றும் உலகவாழ் கிறிஸ்தவ பக்தர்களுக்கு ஆசிச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என பிரதமர் தி. மு. ஜயரட்ன விடுத்துள்ள நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இயேசு நாதரின் புனிதப் பிறப்பின் 2011 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள இத்தருணத்தில் இலங்கை வாழ் கிறிஸ்தவ பக்தர்கள் ஆச்சரியத்தின் பாதைக்குள் பிரவேசித்துள்ளார்கள் என்பது எனது கருத்தாகும். அதாவது கஷ்டம் நிறைந்த இறந்த காலத்தின் துக்ககரமான நினைவுகளிடையே சௌபாக்கியமிக்க எதிர்காலத்தினை வெற்றுக் கண்களினால் பார்ப்பதற்கான பாக்கியம் கிடைத்த இந்தத் தேசத்தின் மக்களாக நாம் இருக்கின்றோம்.

இந்தப் புனித நத்தாரானது உங்களது மானிடப் பண்புகளையும் தார்மீகத் தன்மையினையும் பரீட்சிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பம் என நான் கருதுகின்றேன். அதனால் உண்மையான கிறிஸ்தவர்களாக இந்த நத்தாரை வரவேற்கத் தயாராகுங்கள். உங்களது சந்தோசத்தை விடவும் அடுத்தவரின் சந்தோசத்திற்கு இடமளியுங்கள்.

இந்தத் தருணத்தில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகவும் நாம் முகங்கொடுக்க வேண்டிய சவால்கள் ஏராளமானதாகும். அந்தச் சவால்களை அபிமானத்துடன் வெற்றிக் கொள்ள வேண்டுமெனின் உங்களது சக்தியையும் அர்ப்பணிப்பையும் இந்தத் தேசத்திற்கு வழங்குவதற்கான தேவையான தருணம் இதுவாகும் என நான் நினைவூட்டுகின்றேன். உதயமாகும் நத்தார் தினம் உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியும் சமாதானமும் மிக்க சுப நத்தாராக அமையப் பிரார்த்திக்கின்றேன் - என்றுள்ளது (த)

# அவல நிலையிலிருந்து மக்கள் மீண்டெழட்டும்

### நத்தார் வாழ்த்துச் செய்தியில் டக்ளஸ்


மனித குலத்தின் மீட்சிக்காக உருவாக்கப்பட்ட நீதிச்சட்டங்களை சகல மக்களும் வேற்றுமையின்றி வாழ்வியல் நடைமுறையில் அனுபவிக்க வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் எமது நாட்டில் இரத்தப்பலிகளும், மனிதவதைகளும், கூக்குரல்களும், அழுகுரல்களுமே எஞ்சியிருந்தன. இந்த அவல நிலையில் இருந்து எமது நாடு மீட்சி பெற்றிருக்கிறது. கடந்த கால அவலங்களின் எச்சங்களிலிருந்தும் எமது மக்கள் மீண்டெழவேண்டும் என தெரிவித்துள்ளார் அமைச்சர் டக்ளஸ்.(த)

**CONSULATE GENERAL OF INDIA, JAFFNA.**
**WANTED OFFICE BUILDING FOR RENT**

ADVERTISER IS INTERESTED IN RENTING A DECENT INDEPENENT BUILDING OR TWO/THREE ADJOINING BUILDINGS ON LONG-TERM LEASE FOR ITS OFFICE IN CENTRAL JAFFNA MEASURING AROUND 9500 SQUARE FEET WITH INDEPENDENT PARKING AREA AND CLEAR TITLE ON A MAIN ROAD. INTERESTED PARTIES MAY SEND THEIR OFFER URGENTLY IN CONFIDENCE TO HEAD OF CHAN CERY, 280, PALALY ROAD, JAFFNA.
TELEPHONE: 021 2220504/505 FAX NO: 021 2220503
E-MAIL: HOC.JAFFNA@MEA.GOV.IN

# சிதைகின்றது அல்லிராணிக் கோட்டை மன்னாரில் கவனிப்பார் யாருமில்லை





மன்னார், டிசெ.25

மன்னார் மாவட்டம் அரிப்புக் கிராமத்தில் அமைந்துள்ள அல்லிராணிக் கோட்டை கடலரிப்பின் காரணமாகத் தினமும் சிதைவடைந்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பிரசித்தி பெற்ற அல்லிராணிக் கோட்டை மன்னார் மாவட்டம் அரிப்புக் கிராமத்தில் அமைந்துள்ளது.

இந்த அல்லிராணிக் கோட்டை அரிப்பு கடலுக்கு அருகில் கட்டப்பட்டுள்ளது.

கடந்த யுத்த காலத்தில் கூட இந்தக் கோட்டை பராமரிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது பராமரிக்கப்படுவதில்லை.

கடந்த கால வரலாற்றைக் கூறும் ஞாபகச்சின்னங்கள் பல வடக்கில், அதிலும் மன்னார் மாவட்டத்தில் காணப்படுகின்றன. ஆனால் அவை உரிய முறையில் பராமரிக்கப்படாமையால் அழிவடைந்து வருகின்றன.

இந்த வகையில் இந்த அல்லிராணிக் கோட்டையும் கடலரிப்பின் காரணமாகத் தினமும் சிதைவடைந்து வருகின்றது. இந்தக் கோட்டை செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்வையிடுவதற்குத் தென் பகுதியில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் தினமும் பலர் வந்து செல்கின்றனர்.

ஆனால் கடலரிப்புக் காரணமாக இந்த அரிதான கோட்டை அழிவடைந்து வருவதால் சில ஆண்டுகளின் பின்னர் இதனைப் பார்வையிட முடியுமா என்ற ஐயமும் எழுந்துள்ளது. பண்டைக்கால வரலாற்றுச் சின்னங்களை நிர்மாணிப்பது என்பது இயலாத விடயமாகும்.

ஆனால் இருக்கின்ற வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க முடியும்.

இந்த நிலையில் நிமிடத்துக்கு நிமிடம் கடலரிப்பினால் சிதைவடைந்து கொண்டு செல்லும் அல்லிராணிக் கோட்டையை அரசு பேணிப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மன்னாரில் வாழும் மக்களின் வேண்டுகோளாக உள்ளது. (க-601)

# குடாநாட்டில் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்குப் புதிய திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்தினால் குடிசைக் கைத்தொழில், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான சேவைகள் விரிவுபடுத்தப்படவுள்ளன.

இவற்றில் தொழில் முயற்சியாளர்களுக்கான மூலதன ஏற்பாடுகளும் கடன் வசதிகளும் ஏற்படுத்தல் சிறந்த சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல், புதிய முயற்சியாளர்களை இனங்காணல், ஊக்குவித்தல், துறைசார்ந்த தொழில் பயிற்சிகள், முகாமைத்துவ பயிற்சிகள் என்பவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்பட வுள்ளன. அத்துடன் புதிய தொழில் நுட்ப வசதிகளை ஏற்படுத்துதல் தொழில் முயற்சிக்குரிய வினைத்திறனை இயந்திரங்கள் பற்றிய ஆலோசனைகள் தகவல்கள் வழங்குதல், தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிக்கும் எண்ணமுடையவர்களுக்கும் ஆரம்பித்தவர்களுக்குமான ஆலோசனைகள் வழங்குதல், திட்ட அறிக்கை தயாரித்தல், துறைசார்ந்த தொழில் முயற்சியாளர்களை ஒரு வலையமைப்பின் கீழ் கொண்டு வருதலும், தொடர்பாடல் விரிவாக்கமும் போன்ற செயற்பாடுகளும் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தச் செயற்பாடுகளை பெற்றுக் கொள்ள ஆர்வமுடைய தொழில் முயற்சியாளர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக தமது விவரங்களை தேசிய வீடமைப்பு அதிகார சபைகட்டடம், சுண்டுக்குழி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கும் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரி சபையின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்வதன்மூலம் சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-313)

# பனம் விதை நடும் திட்டம் அடுத்த வாரத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ். குடாநாட்டில் பனம் விதைகளை நடும் திட்டம் அடுத்த வாரத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

நாளை திங்கட்கிழமை குப்பிளான், காரம்பிட்டி மயானத்தில் ஆயிரம் பனம் விதைகள் நட்டுவைக்கப்படவுள்ளன.

தற்போதைய மாரி மழையை பயன்படுத்தி இந்த பனம் விதைகளை குடாநாட்டில் பரவலாக நாட்டி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நடப்படும் பனம் விதைகளைப் பாதுகாத்து அவற்றைப் பராமரிப்பதற்கு சம்பந்தப் பட்ட பிரதேசங்களில் உள்ள பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும்.

குறிப்பாக 2012 ஆம் ஆண்டில் குடாநாடு முழுவதும் பனை வளத்தை அதிகரித்து அதன் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கும் சபை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

ஏற்கனவே நடுகை செய்யப்பட்ட பனம் விதைகளில் அனேகமானவை பழுதாகியுள்ளதுடன் ஏனையவை உரியவாறு பாதுகாக்கப்பட்டு வருகின்றன- என்றார் தலைவர். (த-26)

## பட்டாசு விற்பனை அமோகம்

நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இந்த முறை பட்டாசு விற்பனை சூடுபிடித்துள்ளது.

பட்டாசுகள், ஈர்க்கு வாணங்கள்,சக்கர வாணங்கள் எனப் பல விதம் விதமான பட்டாசுகளின் விற்பனை நகரில் அமோகமாக இருந்தது.

திருநெல்வேலி, யாழ். நகரப் பகுதி நடைபாதைகள் முற்றவெளி, சின்னக்கடை, குருநகர், பாசையூர் ஆகிய பகுதிகளில் நேற்றும் பெரும் தொகையாக அடுக்கிவைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. சிறுவர்கள் முண்டியடித்துக் கொண்டு பட்டாசுகளைக் கொள்வனவு செய்ததையும் காண முடிந்தது.(த-26)



அரியாலை தென்கிழக்கு ஜே/89 மணியந்தோட்டப்பசுமைக் கிராமம் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. திட்டத்தை யாழ்.செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.மோகனேஸ்வரன் ஆரம்பித்து வைக்கிறார். நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் உத்தியோகத்தர்கள் அருகில் உள்ளனர். (த-7)

# 11 குடும்பங்கள் தொடர்ந்தும் தற்காலிக முகாம்களில்

யாழ்ப்பாணம்,டிசெ.25

கடந்த சில நாள்களுக்கு முன் பெய்த அடைமழை காரணமாக வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்த 11 குடும்பங்கள் இன்னும் தற்காலிக முகாம்களில் தங்கியிருப்பதாக வடமராட்சி கிழக்கு பிரதேச செய லக வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமராட்சி கிழக்கில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்த அடைமழை காரணமாக சில பகுதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தத் தொடர் மழையால் 53 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேர் இடப்பெயர்வைச் சந்தித்து இருக்கின்றனர்.

தற்போது மழை ஓய்ந்த நிலையிலும் வீடுகள் தறப்பாள் கொட்டகைகள் பாதிக்கப்பட்டு இருப்பதால் இன்னும் 11 குடும்பங்கள் முகாம்களிலேயே தங்கியுள்ளன. இவர்களுக்கான சமைத்த உணவுக்கான ஏற்பாடுகளை மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை ஆழியவளை, உடுத்துறைப் பகுதிகளில் சில வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. சில வீடுகளுக்குள் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் மக்கள் தமது உறவினர் வீடுகளிலேயே தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதி மக்களுக் கான 9 குடிசைகளை அமைக்க அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் முன்வந்துள்ளது.(த-319)

# திருட்டுச் சந்தேக நபர்கள் நால்வர் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது

யாழ்ப்பாணம், டிசெம் 25

வடமராட்சியில் இடம்பெற்ற பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நால்வர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வடமராட்சியில் இடம் பெற்ற பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் வடமராட்சியின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நால்வர் அடங்கிய குழு நேற்றுமுன்தினம் இரவு நெல்லியடிப் பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பின் போது மாட்டிக் கொண்டது.

வடமராட்சியில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கூறி பொலிஸார் இவர்களை கடந்த மூன்று மாதங்களாக வலைவீசித் தேடிவந்தனர்.

இந்தநிலையில் இவர்கள் ராஜகிராமம் பகுதியில் உள்ள இடமொன்றில் பதுங்கியிருப்பது குறித்து நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த நெல்லியடி, குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சுரவீர, நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி றோஹண உட்பட்ட பொலிஸ் குழுவினர் கடந்த புதன்கிழமை இரவு இவர்களைக் கைது செய்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் பதில் நீதிவான் அ.க நடராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிவான் குறித்த நபர்களை ஜனவரிமாதம் இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-319)

# 782 இலக்க இ.போ.ச. பஸ் காலை 7 மணி சேவை இல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.25

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு காலை 7 மணிக்குப் புறப்படும் 782 இலக்க இலங்கைப் போக்குவரத்து சபை பஸ் தற்போது சேவையில் ஈடுபடாததால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான குறித்த வழி பஸ் கடந்த சில வாரங்களாக காலை 7 மணிக்கு சேவையில் ஈடுபடுவதில்லை. இதன்காரணமாக அலுவலகங்களுக்குச் செல்வோர், தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர்கள் வைத்தியசாலைக்குச் செல்வோர் எனப் பலரும் உரிய நேரத்துக்குக் குறித்த இடங்களுக்குச் செல்லமுடியாது உள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர். அத்துடன் பருவகாலச் சீட்டுக்களைப் பெற்றிருப்போர் தனியார் பஸ்களில் பணம் கொடுத்து பயணிக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டள்ளனர்.

குறித்த பஸ், சேவையில் ஈடுபடாத காரணத்தால் இதே வழியில் தனியார் பஸ்கள் அதிக சன நெரிசலுடன் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. எனவே பொதுமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்களின் நலன் கருதி உரிய நேரத்துக்கு பஸ் சேவையை வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-313)

# நிவாரணப் பொருள்களுக்கான பணத்தை செலுத்தக் கோருகிறது மாவட்ட செயலகம்

யாழ்ப்பாணம், டிசெம்.25

யாழ். குடாநாட்டில் விநியோகிக்கப்பட்ட இடம் பெயர்ந்தோர் நிவாரணத்திற்கான மிகுதி கையிருப்பு பொருள்களுக்கான பணத்தை உடன் செலுத்துமாறு மாவட்ட செயலகம் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் கேட்டுள்ளது.

இந்த ஆண்டில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான முன்று மாத கால நிவாரணமும் கடந்த ஜூன் மாதம் 2ஆம் திகதி வழங்கப்பட்டது.

ஏனைய ஒன்பது மாதங்களு[illegible]ான நிவாரணமும் இதுவ[illegible] வழங்கப்படாதமை யா[illegible]ளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க கடந்த 16ஆம் திகதி யாழ். செயலகத்தால் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இது சம்பந்தமான கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் ஜனவரி, பெப்ரவரி மார்ச் மாதங்களுக்கு இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தின் மீதிக் கையிருப்புப் பொருள்களை விற்று அதற்குரிய கொடுப்பனவை செயலகத்தில் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் இந்தக் கடிதத்தின் மூலம் இடம் பெயர்ந்தோர் நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதா என்ற கேள்வியும் சங்க வட்டாரங்களில் பரவலாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு நிறைவு பெறுவதற்கு இன்னும் ஏழு நாள்கள் இருக்கும் இந்த வேளையில் இடம்பெயர்ந்தோர் நிவாரணத்துக்கான கதி என்னவாயிற்று என்று பயனாளிகள் கவலையுடன் தெரிவித்தனர்.


கடந்த ஒன்பது மாதங்க ளாக இந்த நிவாரணத்தை யிழந்த பெரும்பாலான குடும் பங்கள் நிவாரணம் நிறுத்தப் பட்டால் பெரிதும் பாதிக்கப் படுவார்கள் என்றும் சுட்டிக்காட் டப்பட்டது.

(த-26)

# தொழிற்பூங்காவுக்கு உதவி

யாழ்ப்பாணம், டிசெம் 25

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற்பூங்காவில் தங்கியுள்ளோருக்கு ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி பங்கைச் சேர்ந்த புனித வின்சன் டிபோல் சபையினர் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு உடுபுடைவைகள், சிற்றுண்டிகள் உள்ளிட்ட பல பொருள்களை கடந்த வியாழக்கிழமை வழங்கியுள்ளனர்.



மேற்படி பொருள்களை யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் ஆ.மகேந்திரனிடம் நேரடியாகவே வந்து இச்சபையினர் கையளித்ததுடன் இனி வரும் காலங்களிலும் தாம் தொடர்ந்து இவ்வாறான உதவிகளை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

(த-288)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கருத்தூன்றிச் செயற்பட முனைவோம்

தமிழ்ப் பிரதேசங்களில், குறிப்பாக யாழ். மாவட்டத்தில் முன்னர் எப்போதையும் விட, இப்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. கடந்த ஒருவருட காலத்துக்குள் சுமார் 600 பெண்கள் குடாநாட்டில் வன்முறைக்கு ஆளாகியுள்ளனர். அவர்களில் சுமார் 250 பேர் இளவயதில் கர்ப்பம் தரித்துள்ளனர்.

இந்தத் திடுக்கிடும் புள்ளி விவரங்களை வெளியிட்டுத் தமது ஆதங்கத்தைத் தெரிவித் துள்ளார் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

பெண்கள் வன்முறை ஒழிப்பு வாரத்தையொட்டி நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில், அரச அதிபர், இந்த விவரத்தை மிகுந்த கவலையுடன் எடுத்துச்சொன்னார்.

இவ்விதம் வழிதவறிச் சென்று எமது சமூக நெறிமுறைகளை மீறுவோரை, அதற்கு ஆளாவோரை நல்வழிப்படுத்துவதற்கான பெரும் பொறுப்பு சமூகத்தைச் சார்ந்தது என்று சரியாகச் சுட்டிக்காட்டி உள்ளார் அரச அதிபர்.

இந்த நிலைக்கு ஆளானோரை ஆற்றுப் படுத்தி வழிகாட்டும் பொருட்டு, சமூகத்தின் புத்திஜீவிகள் மற்றும் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களைத் திரட்டி இப்பணி முன்னெடுக்கப்பட்டால், பயன்தரும் என்ற அரச அதிபரின் கூற்றும் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

நாவலர் கலாசாரம், கந்தபுராண கலாசாரம் என்று சிலாகித்துக் குறிப்பிடப்பட்ட குடாநாட்டவரின் கலாசாரம் மற்றும் கட்டுக்கோப்புகள் சிதறிச் சின்னாபின்னமாகி விட்டனவோ என்று கவலையுறும் அளவுக்கு, இன்றைய குடாநாட்டின் நிலை மாறியுள்ளது என்று மனம் ஊன்றிக்கருத்தில் கொள்ள வேண்டிய வேளையிது.

சுமார் முப்பது முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்துக் கிராமம் ஒன்றில், திருமண வயதுக்கு முந்திய பருவத்தில் இளம் பெண் ஒருவர் தாயாகி விட்டால், அவர் மட்டுமன்றி அவரது பெற்றோர், உறவினர்களும் முக்கிய குடும்ப நிகழ்வுகளில் ஒதுக்கப்பட்டு சமூக உறவில் தள்ளி வைக்கப்படுவது எழுதப்படாத சட்டமாகி மேலோங்கி நின்றது. அதனால் பெற்றோர்கள் மட்டுமன்றி குடும்ப உறவினர்கள் கூட வயதுக்கு வந்த பெண்களின் நடத்தையைக் கண்காணித்து வந்தனர்.

இப்போது அந்த நிலை பெரிதும் அருகி விட்டது. சமூக உறவில் உறவினருக்கு உறவினர், குடும்பத்துக்குக் குடும்பம் மற்றவர்களின் விவகாரங்களில் தாம் ஏன் தலையிட வேண்டும் என்ற ''புதிய நாகரிகம்'' வளர்ந்து விட்டது.

அவற்றோடு 'புதிய நாகரிகம்', வன்முறையற்ற எதிர்ப்பாலார் உறவையும் , சுதந்திரத்தையும், கண்டிக்கவோ, கண்காணிக்கவோ இயலாத புறச்சூழல் நிலையையும் தோற்றுவித்துவிட்டது. பெற்றோரின் சொற்கேட்டு , நல்லொழுக்கம் பேணும் போக்கு இளைஞர், யுவதிகளிடம் அருகி வருவதும், இது விடயத்தில் தாராளத்தன்மை நாளுக்கு நாள் உச்சத்தை நோக்கிச் செல்வதும் பெண்கள், குறிப்பாக இளம் பெண்கள் இளவயதில் - பதின்ம வயதில் - தாயாவதற்குப் பிரதான காரணிகளில் ஒன்று. கவலை தரும் இந்நிலை, '' தாய் மகளுக்குக் கட்டிய தாலி'' என்ற அறிஞர் சி.என். அண்ணாத்துரையின் சி.கண்ணாம்பா நடித்த திரைப்படக் கதையை மீள நினைக்க வைக்கிறது.

பெண்களில் பலர் தமக்கு நேரும் பாதிப்புகள் குறித்து, வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுதல் குறித்து, வெளியில் எவருக்கும் தெரியப்படுத்த விரும்புவதில்லை. அதனால் தமது கவலைகளை மனதுக்குள்ளேயே அமுக்கி வைத்து, உள்ளே மறைத்து வைத்துக் கவலைப்படுவதால், அவர்கள் உளநெருக்கீட்டுக்கு ஆளாகின்றனர்.

மேலும், வீட்டில் மனைவி ஒருவர் தமது கணவனால் உடல், உள ரீதியாக கொடுமைப்படுத்தப்படும்போது, அதனைக் காண நேரும் அந்தப் பெற்றோரின் பிள்ளைகள், மனரீதியில் விகாரமுற்று தாமும் வன்முறைப்போக்கு உள்ளவர்களாக மாற நேரிடுகிறது என்று மனநல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன் சுட்டிக்காட்டியதையும் இங்கு மனதூன்றிக் கவனத்தில் கொள்வது அவசியம்.

குடும்பத்தில் நிலவும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடு காரணமாகவும், குடும்பத்தின் வறுமை நிலை, தொழில் வாய்ப்பின்மை காரணமாகவும் பெண்களில் சிலர் வாழ்க்கையில் கலாசாரப் பிறழ்வுகளில் ஈடுபடுவதாகவும் தரவுகள் சுட்டிக்காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களில் ஐம்பது சதவீதமானவை குடும்ப வன்முறைகளாகவே அமைந்துள்ளன-

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறும் தளங்கள் பெரும்பாலும் அவர்களின் வீடுகளாகவே இருப்பதாகவும் - சொல்லப்படுகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து, அவற்றின் தன்மைகள் பலப்பலவாக உள்ளன.

பணியிடங்கள் மற்றும் ஏனைய அலுவலகங்களுக்குத் தேவை கருதிச் செல்லும் போதும் பெண்கள் வன்முறைக்கு உட்பட நேர்கிறது. உளரீதியில் வார்த்தைகளால் காயப்படுத்தப்படுவதும், தொடுகை போன்ற அங்க சேஷ்டைகளுக்கு உள்ளாக நேர்வதும் கெட்ட வழக்கமாகி வருவதாகவும் - தரவுகள் தெரிவிக்கின்றன.

நடைபெற்று முடிந்த போர் காரணமாக சுமார் 29 ஆயிரம் பெண்கள் விதவைகளாகியுள்ளனர். இவர்களில் குறிப்பிட்டதொரு வீதத்தினர், 20 -30 வயதுக்கு இடைப்பட்ட இளம் பெண்கள் ஆவர். வறுமை நிலை காரணமாக அவர்களில் சிலர் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளதாகவும் - தரவுகள் தெரிவிக்கின்றன.

இப்போது தமிழர் பிரதேசங்களில் சமூக வன்முறைகள் பெருகி வருவதை அவதானிக்க முடிகிறது. பாதுகாப்பற்ற சமூக அமைப்புடனேயே - சிதறுண்டு போயுள்ள சமூக அமைப்புடனேயே - சமூகக் கட்டுப்பாடுகள் தளர்ந்து போன நிலையிலேயே காணப்படுகின்றன.

அதன் பெறுபேறாக தொலைக்காட்சி, தொலைபேசி, இணையங்கள், இணைத்தளங்கள் என்பவற்றுக்கு எமது இளைஞர்கள் முற்றாக 'அடிமைகளாக' மாறி வரும் நிலை உருவாகியுள்ளது. இவை குறித்து பெற்றோர்களும் தமது கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் போக்கே காணப்படுகிறது.

அத்தகைய நிலையில், பெற்றோர் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் காட்டும் ஆர்வத்தை அவர்களை நெறிப்படுத்துவதில் காட்டுவதில்லை. அதனால் ''கண்டதே காட்சி கொண்டதே கோலம்'' என்ற நிலைமையே மேலோங்கி வருவதை இங்கு அவதானிக்க முடிகிறது.

எனவே தமது பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி ஒழுக்கம் பேணுவதனை உறுதி செய்து வளர்க்கும் பொறுப்பு, முழுக்க முழுக்க பெற்றோர்களையே சாரும். ஒழுக்கம் மற்றும் வாழ்க்கை நடைமுறைகள் சார்பான கடினமான முடிவுகளைப் பெற்றோர் எடுக்காவிடில் இளைஞர், யுவதிகளின் எதிர்கால வாழ்க்கை மலினப்படும்.

ஆகையால், இப்பத்தியின் ஆரம்பத்தில் தொட்டுக்காட்டப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாமற் செய்வதற்கு, சமூகத்தின் எல்லாத் தரப்பினரதும், எல்லா வகையினரதும் கூட்டு முயற்சி தேவை.

# நிருபமாவின் மகன் திருமணத்தில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய

இந்தியாவின் முக்கிய இராஜதந்திரிகளில் ஒருவரும், நமது நாட்டுடன் நெருங்கிய தொடர்புகளை உடையவரும் தற் போது அமெரிக்காவுக்கான இந்தியத் தூத ராக இருப்பவருமான நிருபமா ராவின் புதல்வரது திருமணம் அடுத்த வாரம் புதுடில்லியில் நட்சத்திர ஹோட்டலொன்றில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தத் திருமணத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுடிருந்தது. ஆனால், அதிகமான வேலைப்பளு காரணமாக அவர் திருமணத்தில் கலந்துகொள்ளமாட்டார் என்று தெரிகிறது. அவருக்குப் பதிலாக ஜனாதிபதியின் செயலாளரும், பாதுகாப்புச் செயலாளரும் இந்த வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். தென்னாசியாவின் முக்கிய அரசியல் தலைவர்களும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ-சி)

# தேசியப் பாடசாலைகளில் மேலதிகமான ஆசிரியர்களுக்கு ஜனவரியில் இடமாற்றம்

## மாகாணப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவர்

வடமாகாணத்தில் தேசியப் பாடசாலைகளில் மேலதிகமாகக் கடமையிலுள்ள ஆசிரியர்கள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

வடமாகாணத்திலுள்ள தேசியப் பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்களாக கணிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களுடனான சந்திப்பின்போதே வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்றது.

தேசியப் பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களின் விவரங்கள் ஏற்கனவே அதிபர்கள் ஊடாகத் திரட்டப்பட்டிருந்தன. கல்வி அமைச்சுக்கு அதிபர்கள் சுட் டிக்காட்டிதயதற்கு அமைவாகவே மேலதிக ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கூறினார்.

மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களில் வன்னிப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்குத் தமது சுய விருப்பின் அடிப்படையில் இடமாற்றத் தெரிவை மேற்கொள்வதை மாகாணக் கல்வித் திணைக்களம் விரும்புகிறது. அதேபோல் வடமராட்சி கிழக்கு மற்றும் தீவக வலயங்களிலுள்ள பாடசாலைகளுக்கும் இடமாற்றம் பெறுவதை ஆசிரியர்கள் விரும்பவேண்டும் என்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் கூறினார்.

வன்னிப் பகுதி, தீவகம், வடமராட்சி கிழக்கு ஆகிய வலயங்கள் தவிர்ந்த ஏனைய வலயங்களுக்கான இடமாற்றம் நிபந்தனையுடனேயே வழங்கப்படும் எனவும் மாக ணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை,

தேசியப் பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்களை மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வது நியமன விதிகளுக்கு முரணானது, அது மட்டு மன்றி வன்னி, தீவகம், வடமராட்சி கிழக்கு ஆகிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்குவது பிழையானது என வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவின் கவனத்துக்குச் சில ஆசிரியர்கள் கொண்டு வந்துள்ளனர் என அந்தக் குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(த-14)

# நகர அபிவிருத்தி அதிகார சபையின் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.25

நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பல்வேறு பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நிதி, பொறியியல், கட்டடக்கலை ஆகிய பிரிவுகளுக்கு, தனித்தனியான உதவிப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், தொழில் நுட்ப உத்தியோகத்தர், திட்டமிடல் உதவியாளர், திட்டமிடல் மற்றும் தகவல் முகாமைத்துவ முறைமை, ஆராய்ச்சி, புள்ளிவிவரம், முறைமைப் பகுப்பாய் வாளர் ஆகிய பிரிவுகளுக்கான தனித்தனி யான உதவிப் பணிப்பாளர், தரவு தயாரிப்பு உதவியாளர், சமுதாய அபிவிருத்தி உதவியாளர், செய்தி நிரல் எழுதுநர், முகாமைத்துவ உதவியாளர் ஆகிய 14 பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுயவிவரக் கோவை மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் முகவரிகளுடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். நேரடியாக வருவதாயின் 25.12.2011, 27.12.2011, 29.12.2011 ஆகிய நாள்களில் பி.ப. 1மணியிலிருந்து மாலை. 5 மணி வரை வரவும்.

பணிப்பாளர்,
V.V .இராமநாதன் அன்ட் கொம்பனி,
வைத்தியசாலை சுற்று வட்ட வீதி,
வவுனியா.

கிளை முகாமையாளர்,
V.V .இராமநாதன் அன்ட் கொம்பனி,
23, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(12072)(6,7,8)

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்...

# STUDY IN UK

- அடிப்படைத் தகைமைகளுடன் உயர்கல்வி பயில கல்லூரி / பல்கலைக்கழக அனுமதிக்கான ஆலோசனைகள்
- தெரிவு செய்யப்படும் பாடங்களுக்கமைவாக (நோக்கம்) ஆங்கிலப் பரீட்சை எழுதுவது அவசியம்.
- மிகக் குறைந்த செலவில் விசா பெற்றிட அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**PS CONSULTING**
No. 19A, Station Road, Kondavil West, Kondavil, Jaffna.
(உப்பு மடம் சந்திக்கு அருகில்)
T.P.: 0778328290 / 0755766786
(12053)(5)

# சேவை

கனடா, இத்தாலி, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு விசிட், வேர்க், PR, பிஸ்னஸ் Visa க்கள் செய்து தரப்படுவதுடன் வேறு முகவர் மூலம் சென்று Greece, Spain,Porland ஆகிய நாடுகளில் இருந்து கனடா, UK, இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு செல்ல முடியாமல் இருப்பவர்களுக்கு மனித உரிமைகள் British சட்டத்தின் மூலம் எமது நிறுவனத்தினால் தகுந்த Visa ஒழுங்குகள் செய்து தரப்படும். 2012 ஜனவரி 15 ஆம் திகதி வரை நீங்கள் பெறும் Visa ஆலோசனைகளுக்கு முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
0772484403

அனுமதிகள் 26.12.2011
2.00 - 5.00 மணிவரை

# Children's World

Centre for Child Development
PreSchool ஆங்கில மொழி பாலர் பாடசாலை

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் தேசிய கொள்கைக்கு அமைவானது

(கடந்த 3 வருடங்களாக யாழ் நகரில் இயங்கி வந்த எமது பாடசாலை தற்போது K.K.S வீதி கோண்டாவில் மேற்கு உபதபாலகம் அருகில் அமைந்துள்ளது.)

- Language Development
- Knowledge Development
- Skill Devlopment
- Values Development
- Speach & Drama Class.

ஆரம்பம் 04.01.2012

அனுமதிகள் 2 1/2 வயது முதல்

Open The Door To Your Child's Future

K.K.S வீதி கோண்டாவில் மேற்கு [உபதபாலகம் அருகில்]

கடந்த வருடம் இங்கு கல்வி கற்ற மாணவர்கள் அனைவரும் பிரபல பாடசாலைகளில் தரம் 01 அனுமதி பெற்றுள்ளனர்.

முன் அனுமதிக்கு
0777729525 ,0774685174

# அறிமுகமானவர் போல் நடித்தவரால் இளைஞரின் மோ. சைக்கிள் 'அபேஸ்'

## 'முடிந்தால் வாங்கிப்பார்' என்று தொலைபேசியில் அச்சுறுத்தல் வேறு!!

யாழ்ப்பாணம், டிசெ.25

ஓரிரு நாள்கள் கண்டு கதைத்து அறிமுகமான இளைஞரான 'நண்பர்' மற்றைய இளைஞரின் புதிய ரக மோட்டார் சைக்கிளை 'இதோ உடன் வருகிறேன்' என்று கூறி வாங்கிச் சென்றவர், திரும்பி வரவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன்னார் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்தவர் வல்வெட்டித்துறை, வல்வெட்டியைச் சேர்ந்தவர்.

அவர் நடந்தவற்றைக் கூறுகிறார்:

நான் வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தேன். தொண்டமானாறு பகுதியில் வந்து கொண்டிருந்த போது 'புதிய நண்பர்' தானும் யாழ்நகர் செல்வதாகக் கூறினார். அவரையும் ஏற்றிக்கொண்டேன். இருவரும் யாழ்நகர் வந்து சேர்ந்தோம்.

நான் மோட்டார் சைக்கிளை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு அலுவல் ஒன்றுக்குச் செல்லத் தயாரானேன். அவ்வேளை என்னுடன் வந்த 'நண்பர்' மோட்டார் சைக்கிளைக் கேட்டார். ''கடைக்குப் போய் உடனே வந்துவிடுவேன்'' என்று கூறியே கேட்டார். நானும் கொடுத்துவிட்டேன். போனவர் போனது தான். திரும்பி வரவில்லை-என்றார் மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்தவரான க.மயூரன்.

மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு தலைமறைவானவர் சில நாள்கள் மட்டும் கண்டு பழகி இருந்தார். தான் மன்னாரில் இருந்து வந்து இங்கு தொழில் நிமித்தம் தங்கியிருப்பதாகக் கூறியிருந்தார். என்னுடைய தொலைபேசி இலக்கத்தையும் ஏற்கெனவே பெற்றிருந்தார். அவர் தமது பெயரை நீகன் என்று கூறியிருந்தார். ஆனால் அவரது பெயர் ஜோசப் பெரேரா என்று கூறப்படுகிறது.

தற்போது அவர் வெவ்வேறு தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு, ''தான் மோட்டார் சைக்கிளுடன் மன்னார் வந்து விட்டேன். முடிந்தால் உம்முடைய மோட்டார் சைக்கிளை வேண்டிப் பார்'' என்று அச்சுறுத்தி வருகிறார் என்றும் கூறுகிறார் பாதிக்கப்பட்டவரான மயூரன்.

தம்மோடு தொடர்பு கொண்ட தொலைபேசி இலக்கங்களை யாழ்ப்பாணம் பொலிஸில் கொடுத்து முறைப்பாடு செய்துள்ளேன் என்றார். (ஓ-426-323)

## சுனாமி நினைவாக ஆய்வரங்கும் கண்காட்சியும்

சுனாமி நினைவு ஆய்வரங் கும், சிற்பக் கண்காட்சியும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு துர்க்காபுரத்திலுள்ள சிற்பாலயம் கலைக்கூடத்தில் நடைபெறும்.

மல்லாகம், தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் வலி.வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவை இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது.

இதில் இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தல், எம்மைப் பாதுகாத்தல், மீண் டெழுதல் தொடர்பான ஆய் வரங்கு துறைசார் நிபுணர்களால் நடத்தப்படும்.

அத்துடன் சிற்பக் கலைஞர் ஏ.வீ.ஆனந்தனின் சிற்பக் கண்காட்சியும் இடம்பெறும். இதில் மேற்கு நாடுகளில் காட்சிப்படுத்தப்பட்ட அரிய சிற்பங்களையும் பார்வையிட முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ங-86)

## திருவாசக முற்றோதல்

சதாவதானி கதிரவேற்பிள்ளை அறநெறிப் பாடசாலையால் நடத்தப்படும் திருவாசக முற்றோதல் இன்று புலோலி மேற்கு தெணியம்மன் கோயிலில் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து இடம்பெறும் முற்றோதலின் இறுதிநாள் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி தம்பருட்டி சிவன் கோயிலில் இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஓ-15)


### காணி விற்பனைக்கு

இராசா பிளாசா ஒழுங்கையில் $13\frac{1}{2}$ பரப்புக் காணியும் கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் இருபாலை றோட் 16 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:0213218432,0776366090


## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் இந்திரை



சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இந்திரை நேற்று (24.12.2011) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாதர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை விநாசித்தம்பி - உடையார் அம்மினி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கமலாதேவி, தவமணிதேவி, புவனேஸ்வரி, பத்மநாதன், நடராசா, கனகாம்பிகை, புண்ணியமூர்த்தி, மனோராணி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் வைத்திலிங்கம், இராசநாயகம், சற்குணமலர், சுசிலாதேவி, சிவராசா, கலைச்செல்வி, பாலராசா ஆகியோரின் அன்பு மாமியும் இராசு, வியாளாச்சி, காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, தம்பிராசா மற்றும் பிறைகுடி ஆகியோரின் அன்புச் சகோதரியும் உதயகுமார், ருக்கிகா, சிறிஸ்கந்தராசா, ராகினி, ஜமுகன், ஜங்கரணி, பானுரதன், தர்சிகா, நீதன், கீதன், தினேஸ், நிமேஸ், நிரோஸ் ஆகியோரின் செல்லப் பேர்த்தியும் ஆர்த்தியா, நித்தியா, அபிகர்சன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் சிறுப்பிட்டி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. — தகவல்: பிள்ளைகள்.

### சின்னத்தம்பி பாலகிருஸ்ணன்



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சி.பாலகிருஸ்ணன் நேற்று (24.12.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் ஆனந்தியின் அன்புக் கணவரும் சாம்பசிவம், அருளானந்தம், தயா, நவம், சுசிலா, ஜெயா, வபாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசுரேஸ், மனோச்சித்திரா, பாலகணேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவனீதரன், யசோதா, குயேந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் அயிசாந், சயேந்தினி, டினோஜா, நிலுக்சி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. — தகவல்: குடும்பத்தினர்.


### சிறுப்பிட்டியில் நாளை ஆள்சேர்ப்பு

உணவு கையாளும் உற்பத்தி - குளிர்பான தாயரிப்புக்கு ஆண், பெண் ஆகிய இருபாலாரிடமும் இருந்து வேலைக்கு உடன் ஆள்சேர்ப்புச் செய்யப்படும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும். நேர்முகத் தேர்வுக்கு (நாளை 26.12.2011) திங்கட்கிழமை காலை 9 மணி முதல் இடம்பெறும்) வருகை தரவுள்ளோர் இராசா பாதை வீதியில், சிறுப்பிட்டி மேற்கு, ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகில் சமுகமளிக்கவும்.

தொலைபேசி: 0779594326

### விற்பனைக்கு

டாட்டா டிமோ பட்டா (pp xxxx) வாகனம் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு : 0775982920, 0772790003

### தவறிவிட்டது

அம்பகாமம் மாங்குளத்தைச் சேர்ந்த மயில்வாகனம் வதனேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (866493227V) பிறப்புச் சான்றிதழ் என்பன யாழ்ப்பாணம் தனியார் பஸ் நிலையத்துக்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: 0772151948

### விற்பனைக்கு

3 நாள்கள் மட்டும் பாவித்த புதிய A/C (சிங்கர்) 2400 BTU, 49 CC மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0773663986

### தவறிவிட்டது

நேற்று மதியம் யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதிக்கும் பொன்னம்மா மில் சந்தி ஊடாக பிரதான தபாந்தோருக்கும் இடைப்பட்ட வீதியில் நீல நிற பொலித்தீன் பையிக்குள் பிறவுன் பையில் இருந்த பெருந்தொகை பணம் தவறி விட்டது. இதை கண்டெடுத்த இரக்க குணம் கொண்டவர்கள் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(அதிகூடிய சன்மானம் வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு: 0774598461, 0774667238


### 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சேனாதிராஜா தயாளன்
(இலங்கை மின்சார சபை ஊழியர்)

தோற்றம் 10-05-1960 — மறைவு 28-12-2008

ஆண்டுகள் மூன்று அவனியில் ஆனதையா!
ஆற்றிய பணிகளோ அகலவில்லை
எம்மைவிட்டு போறதியே உலகமுங்கள்
புகழ்தனைப் பாடுதையா நாளும் உங்களை
நாம் மறக்கமாட்டோமையா

C 1/1 சென்றல் றோட்,
கொழும்பு - 12
முகவரி -நீர்வேலி வடக்கு

குடும்பத்தினர்.


# சுந்தர்சன் நிறுவனத்தின்

## மாபெரும் மலிவு விற்பனையில் பரிசு வென்ற 40 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள்

1 ஆம் பரிசு - Single Door Fridge - பீற்றர் இமானுவேல். சில்லாலை
2 ஆம் பரிசு - Washing Machine - வில்லியம் றொபேட். உடுவில் தெற்கு
3 ஆம் பரிசு - 21" LG TV - சுதாகரன் பிரசாங்கிதன். சுன்னாகம்
4 ஆம் பரிசு - Greentel Mobile Phone G8 - ஜீவகுமார். காரைநகர்
5 ஆம் பரிசு - Mr. Plus Woofer - ஜனந்தினி. சித்தங்கேணி
6 ஆம் பரிசு - Greentel Mobile Phone GT400 - குணசிங்கம். கொக்குவில்
7 ஆம்பரிசு - Mr.Light Torch Light - இராஜலிங்கம். சண்டிலிப்பாய்
8 ஆம் பரிசு - Mr. Plus Blender - மெல்சியா. ஆனைக்கோட்டை
9,10,11 ஆம் பரிசு - Rice Cooker - சுந்தரத்தினம். அராலி - யோகேஸ்வரன். யாழ்ப்பாணம் ஷஸ்மிதா. மானிப்பாய்
12,13,14 ஆம் பரிசு - Pedastal Fan - வலி தெற்கு பிரதேச சபை - ஆனந்தசிங்கம். நவாலி கலையழகன். யாழ்ப்பாணம்
15 ஆம் பரிசு - Greentel Mobile Phone GT100 வசந்தன். மானிப்பாய்
16 - 20 ஆம் பரிசு - Table Fan
நமேஸ். உரும்பிராய் - ஜெயராணி. கொக்குவில் - திவாகர். பண்டத்தரிப்பு போல் கமல்ராஜ். உரும்பிராய் - இராசன். சுதுமலை
21 - 25 ஆம் பரிசு - Sandwich Toasters
கணநாதன். வட்டுக்கோட்டை - சுகந்தன். சாவற்கட்டு - தீபிகா. மானிப்பாய் கிருஷ்டா.இளவாளை - விஜயராகவன். கந்தரமடம்
26 - 30 ஆம் பரிசு - Jug Kettle
ஆனந்தசிங்கம். நவாலி - விக்னேஸ்வரி. ஆனைக்கோட்டை - துளசிகாயினி. இணுவில் யோகராஜா. சுன்னாகம் - ரூபசுதன். சுழிபுரம்
31 - 40 ஆம் பரிசு - Iron Box
றொபின்சன். ஆனைக்கோட்டை - சத்தியசீலன். மானிப்பாய் - ஜனானன். மானிப்பாய் இரட்ணசிங்கம். சுழிபுரம் - உதயனன். சுழிபுரம் - செல்வகுமார். பண்ணாகம் மதி. யாழ்ப்பாணம் - இந்திராதேவி. மானிப்பாய் - ஜெயராஜன். வட்டுக்கோட்டை அதியமான். புத்தூர்

# இலங்கையை அச்சுறுத்திய பிளென்டருக்குக் காயம்

தென்னாபிரிக்க அணியின் வேகப் பந்து வீச்சாளர் பிளென்டருக்கு பயிற்சியின் போது காலில் காயம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கை அணியுடனான நாளைய இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது.

தென்னாபிரிக்க அணியின் வேகப் பந்து வீச்சாளரான பிளென்டர் இலங்கை அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டு இன்னிங்ஸிலும் அசத்தலாக பந்து வீசி 11 இலக்குகளை மொத்தமாகக் கைப்பற்றினார். அத்துடன் ஆட்ட நாயகனாகவும் தெரிவாகியிருந்தார்.

கடந்த மாதம் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருடன் தனது டெஸ்ட் பயணத்தை பிளென்டர் ஆரம்பித்திருந்தார். தான் விளையாடிய மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் அதாவது ஆறு இன்னிங்ஸ்களில், நான்கு தடவை 5 இலக்குகளை கைப்பற்றியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற வலைப் பயிற்சியின் போதே பிளென்டருக்கு, இடது முழங்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக தென்னாபிரிக்க அணியின் முகாமையாளர் மொஹமட் மொசாஜி தெரிவிக்கையில், பயிற்சியின் போது இடது முழங்காலில் காயம் ஏற்பட்டது. உடனடியாகவே பயிற்சியை விட்டு வெளியேறி காயத்துக்கு சிகிச்சை மேற்கொண்டார். அவர் நாளை இடம்பெறும் ஆட்டத்தில் கலந்து கொள்வார் என்றே எதிர்பார்க்கின்றோம் - என்றார். (15)

# ஊக்கமளித்தவர் சச்சின்தான்

## கூறுகிறார் டிராவிட்



இந்திய அணியில் தற்போது உள்ள வீரர்களில் மிகவும் மூத்த வீரர் டிராவிட் தான். அவர் இன்னும் ஒரு சில தினங்களில் 39 வயதை கடக்கிறார். இந்த ஆண்டில் டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்தவர் என்ற பெருமையை டிராவிட் தான் பெற்றுள்ளார்.

தொடர்ச்சியாக அவர் அடுத்தடுத்து சதங்கள் விளாசியுள்ளார். ஆஸ்திரேலியா சுற்றுப்பயணம் இதுதான் அவருக்கு கடைசியாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இந்த முறை நிச்சயம் ஆஸ்திரேலியாவில் கிண் ணத்தை வெல்ல வேண்டும் என்று டிராவிட் உறுதியுடன் இருப்பதாக சமீபத்தில் கூறியிருந்தார்.

இந்த நிலையில் அவர் கூறுகையில், எனது ஆட்டத் தின் திறன் திடீரென பாதிக்கப்பட்ட போது, கிரிக்கெட் டிலிருந்து ஒதுங்கி விடலாம் என்று நினைத்தேன். அப் போது, சச்சின் எனக்கு ஊக்கம் அளித்தார். அது தான் என்னை அதிக ஓட்டங்கள் எடுக்க தூண்டியது. நான் சேவாக் போன்று ஆடுவது கிடையாது. எனது பாணியில் வழக்கம் போல் ஆடுகிறேன். ஓட்டங்கள் குவிப்பதற்கான வழி களை தேடிய பிறகே அதில் பயணிப்பேன் என்றார். (15)

# சிறந்த வீரரராக மார்க் கவுன்டிஸ்

பி.பி.சி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வாக்கெடுப்புக்களின் பிரகாரம், இந்த வருடத்துக்கான சிறந்த தனிப்பட்ட வீரருக்கான பி.பி.சி விருதுக்கு டுவர் டி பிரான்ஸ் சம்பியான சைக்கிளோட்ட பந்தய வீரர் மார்க் கவன்டிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த விருதைப் பெற்றுக் கொள்ளும் மூன்றாவது சைக்கிளோட்ட வீரர் மார்க் கவன்டிஸ் என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை சிறந்த வெளிநாட்டு வீரருக்கான விருதுக்கு சேர்பியாவின் நொவெக் ஜோகொவிச் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (15)

# கால் பந்தாட்ட வீரருக்குத் தடை

இன ரீதியாக வார்த்தைகளைப் பயன்படுத்தியதாக இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் தலைவர் ஜோன் டெரி மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற, பிரீமியர் லீக் போட்டியொன்றின் போது சக வீரரான அன்டன் பேடினன்ட் மீது இன ரீதியான வார்த்தை பிரயோகத்தினை ஜோன் டெரி பயன்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொதுமகன் ஒருவரால் செய்யப்பட்ட முறையீட்டிற்கு அமைய டெரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக இங்கிலாந்து தகவல்கள் தெரிவிக்கின்றன. (15)

# சதம் கடக்க சச்சினுக்கு வாழ்த்து

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது 100 ஆவது சர்வதேச சதத்தை அடுத்த டெஸ்ட் ஆட்டத்தில் பெற வேண்டும் என்று தான் விரும்புவதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன் கூறியுள்ளார். இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான அடுத்த டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் மெல்பேர்னில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சச்சின் டெண்டுல்கர் தனது 100 ஆவது சதத்தை ஆஸ்திரேலியாவில் பெறுவார் என்று தான் கருதுவதாகவும் ஆனால், அதை அவர் மெல்பேர்னில் சாதிக்க வேண்டும் என தான் விரும்புவதாகவும் ஷேன் வோர்ன் கூறினார்.

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஆஸ்திரேலிய - இந்திய ஆட்டமானது சச்சின் டெண்டுல்கரின் 185 ஆவது டெஸ்ட் போட்டியாகும். இதுவரை டெஸ்ட் போட்டியில் 51 சதங்களையும் ஒருநாள் சர்வதேச போட்டியில் 48 சதங்களையும் அவர் பெற்றுள்ளார்.

இறுதியாக கடந்த மார்ச் மாதம் தென்னாபிரிக்காவுடனான உலகக் கிண்ணப் ஆட்டத்தின்போது அவர் சதம் குவித்தார். அவரின் இறுதி டெஸ்ட் சதமும் தென்னாபிரிக்காவுக்கு எதிராகவே பெறப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் கேப்டவுனில் நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் ஆட்டத்தில் அவர் 145 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். (15)




# ஆஸியில் சச்சினுக்கு வாய்ப்பளிக்க மாட்டோம்

இந்திய அணி 4 டெஸ்ட் ஆட்டங்கள், முத்தரப்பு ஒருநாள் தொடர்களில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியா சென்றுள்ளது. முதல் டெஸ்ட் ஆட்டம் நாளை ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆட்டத்தில் சச்சின் தனது 100 ஆவது சதத்தை அடிப்பார் என்று எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் மைக் ஹஸி கூறியதாவது:


டோனி தலைமையில் ஆஸ்திரேலியா வந்த இந்திய அணி முதல் முறையாக கடந்த 2008 ஆம் ஆண்டில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரை வென்று காட்டியது. அதனால் இந்திய அணிக்கு எந்த நெருக்கடியும் இருக்காது என்று மற்றவர்கள் நினைக்கலாம். ஆனால் நாங்கள் இந்திய அணிக்கு இந்த முறை கடுமையான நெருக்கடி கொடுப்போம்.

மேலும் சச்சின் பற்றி ஹஸி கூறுகையில், சச்சினின் 100 ஆவது சதத்தை ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்து வருகின்றனர். இந்த எதிர்பார்ப்பை எப்படி பூர்த்தி செய்வது என்று அவருக்கு தெரியும். ஆனால் ஆஸ்திரேலியாவில் அவர் 100 ஆவது சதம் அடிக்க மாட்டார் என்று எதிர்பார்க்கிறோம் எனவும் கூறினார்.

ஆஸ்திரேலியாவின் முன்னாள் அணித்தலைவர் மார்க் டெய்லர் அந்த நாட்டு நிலைமைகளை சமாளிக்க இந்தியர்கள் சிரமப் படுவார்கள் என்று கூறியுள்ளதற்கு மைக் ஹஸி மறுப்பு தெரிவித்துள்ளார்.

இந்திய வீரர்கள் எங்கும் எளிதில் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறிகொள்ளும் அனுபவமிக்கவர்கள். ஆஸ்திரேலிய அணி பந்து வீச்சில் இந்தியர்களை வீழ்த்த வேண்டும் என்று கூறியுள்ளார். (15)

# கனவு பலிக்கப் போராடுவோம்




ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் வெற்றி பெற வேண்டும் என்பது எங்களின் கனவு, என்று இந்திய வீரர் லக்ஸ்மன் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக லக்ஸ்மன் இதுவரை 25 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ளார். 2001 இல் கொல்கத்தாவில் நடந்த ஆட்டத்தில், 281 ஓட்டங்கள் அடித்து டெஸ்டில் அதிகபட்ச ஓட்டங்களைப் பதிவு செய்தார். ஆஸ்திரேலியாவில் 11 டெஸ்டில் விளையாடி, நான்கு சதங்கள் அடித்துள்ளார். சிட்னி மைதானத்தில் மட்டும் மூன்று சதங்கள் அடித்துள்ளார்.

இது குறித்து லட்சுமண் கூறியதாவது:

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக வெற்றி பெற வேண்டும் என்பது அனைத்து கிரிக்கெட் வீரர்களின் கனவாக இருக்கும். அந்த கனவு தற்போது எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள மைதானங்கள் துணைக்கண்டத்தில் இருப்பதை காட்டிலும் நன்றாக உள்ளது. இது அருமையான முறையில் துடுப்பெடுத்தாடுவதற்கு உதவியாக இருக்கும். முதல் டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பு கிடைத்தால், முதல் இன்னிங்சில் அதிகபட்சமான ஓட்ட எண்ணிக்கையப் பதிவு செய்ய வேண்டும். இதனால் எதிரணி வீரர்களுக்கு பதட்டத்தை கொடுக்கலாம். இங்கிலாந்தில் அடைந்த மோசமான தோல்விக்கு, அந்த அணியிணருக்கு எதிராக இந்தியாவில் நடந்த போட்டியில் 5-0 என்று அவர்களை வீழ்த்தி தக்க பதிலடி கொடுத்தோம். ஆஸ்திரேலிய தொடரிலும் வெற்றி பெற்று எங்களின் வலிமையை நிரூபிப்போம் - என்றார். (15)

# ஊடகங்களிடம் பலியாகக் கூடாது

ஆஸ்திரேலிய வீரர்கள் மற்றும் உள்ளூர் ஊடகங்களின் தூண்டுதலுக்கு இந்திய இளம் வீரர்கள் பலியாகி விடக்கூடாது. தொடர் முடியும் வரை பொறுமையாக இருந்து சாதிக்க வேண்டும் என்று வீரர்களுக்கு இந்திய அணியின் பயிற்சியாளர் பிளட்சர் அறிவுரை வழங்கியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் பயிற்சியாளராக பிளட்சர் இருக்கையில் ஆஸ்திரேலியாவுக்கு, இங்கிலாந்து அணி சென்ற போது, 87 ஆண்டு கால வரலாற்றில் இல்லாத அளவுக்கு மோசமான தோல்வியை சந்தித்தது.

இதுகுறித்து 'தி ஹெரால்டு சன்' என்ற பத்திரிக்கை செய்தி வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது,

அணியின் மூத்த வீரர்களுக்கு ஊடகங்கள் மற்றும் களத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது நன்கு தெரியும். இதனால் இளம் வீரர்களுக்கு பிளட்சர் ஏகப்பட்ட அறிவுரைகள் வழங்கினார். களத்தில் யாருடனும் மோதக் கூடாது. அமைதியாக இருக்க வேண்டும். ஊடகங்களுடன் பேசும் போது, வார்த்தைகளை கவனமாக பயன்படுத்த வேண்டும். உங்களின் கோபத்தை துடுப்பாட்டம், பந்துவீச்சின் போது வெளிப்படுத்துங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

# தமிழகம் வருகிறார் மன்மோகன் ஈழ அகதிகள் 3 நாள் 'தடுப்பில்'

சென்னை, டிசெ.25

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நாளை திங்கட்கிழமை தமிழகம் வருகிறார். அவரின் இரண்டு நாள் தமிழகச் சுற்றுப் பயணத்தால், அகதி முகாம்களில் உள்ள ஈழத் தமிழர் 3 நாள்கள் 'தடுப்பில்' வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முதல் 3 நாள்கள் அகதிகள் எவரும் வெளியூர்களுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உள்ளூரில் வேலைக்குச் செல்வோரும் குறிப்பிட்ட நேரத்துக்கு 'சாக்குப்போக்கு'ச் சொல்லாமல் முகாம் திரும்பி விட வேண்டும். இது முகாம் அதிகாரிகளின் கடும் உத்தரவு.

பிரதமர் மன்மோகன் சிங் நாளை திங்கட்கிழமை காரைக்குடியில் அண்ணாமலைப் பல்கலைக்கழக விழாவில் கலந்து கொள்கிறார். பிரதமரின் சுற்றுப் பயணம் காரணமாக சென்னை சிவகங்கை மாவட்டத்தில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 113 ஈழ அகதிகள் முகாம்கள் கியூ பிரிவு பொலிஸாரும் தீவிரமான கண்காணிப்பில் உள்ளன.

சந்தேகத்துக்குரியவர்களை எவரும் வீடுகளில் தங்க வைக்கக் கூடாது என்றும் எந்த வேளையிலும் முகாம் குடியிருப்புகள் திடீர் சோதனைகளுக்கு உட்படுத்தப்படலாம் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (ஒ)

# சதுரங்க விழா வைத்தீஸ்வராவில்

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளனம் நடத்தும் ''யாழ். சதுரங்க'' விழா நாளை திங்கட்கிழமை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

திங்கள்கிழமை ஆரம்பமாகும் யாழ்.சதுரங்க விழா 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். சதுரங்கச் சம்மேளனத்தால் தெரிவு செய்யப்பட்ட யாழ். வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

சர்வதேச தரப்பட்டியலில் இடம்பெறுவதற்காக நடத்தப்படும் சர்வதேச தரப்படுத்தலுக்கான போட்டி, ருவென்ரி -20, மின்னல் வேகச் சதுரங்க போட்டிகள் என்பனவும் இதில் இடம்பெறவுள்ளன.

இதில் ருவென்ரி -20 சதுரங்கப் போட்டி வயதுப் பிரிவு அடிப்படையில் ஆண், பெண்களுக்கான தனித்தனிப் போட்டிகளாக இடம்பெறும்.

இதில் 9 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான போட்டி நாளை திங்கட்கிழமையும் 11 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான போட்டி 27 ஆம் திகதியும், 13 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான போட்டி 28 ஆம் திகதியும், 15 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான போட்டி 29 ஆம் திகதியும், 17 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான போட்டி 30 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவோர் தத்தமது பிரிவினருடன் மட்டுமன்றி தமது வயதுப் பிரிவுக்கு மேற்பட்டோருடனும் போட்டியிட முடியும். இதற்கெனத் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் கையளிக்கப்பட வேண்டும்.

31 ஆம் திகதி திறந்த மின்னல் வேக சதுரங்கப் போட்டி இடம்பெறும். இந்த போட்டியில் ஒரு சுற்றுக்கு தலா 5 நிமிடம் மட்டுமே வழங்கப்படும்.

சர்வதேச தரப்படுத்தலுக்கான போட்டியில் வெற்றி பெறும் வீரர்கள், வீராங்கனைகளுக்கு பணப் பரிசில்களுடன் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

சதுரங்க ருவென்ரி - 20



மின்னல் வேக சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

(த-23)

# பொலிஸ் - ஆயுதக் குழுவுக்கு இடையில் பரஸ்பர துப்பாக்கிச் சூடு: இருவர் பலி

கொழும்பு, டிசெ.25

மித்தெனிய, ஜுலம்பிட்டிய பிர தேசத்தில் அமைந்துள்ள பாழடைந்த வீடொன்றுக்குள் பொலிஸாருக்கும் ஆயுத குழுவொன்றுக்கும் இடையில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு ஆயுததாரிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் கொல்லப்பட்ட ஆயுத தாரிகள், இராணுவ சீருடையை ஒத்த ஆடைகளை அணிந் திருந்தனர் என் றும் மேலும் இரு ஆயுததாரிகள் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே மேற்படி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் ஆயுததாரிகள் இருவர் கொல்லப்பட்டனர். சம்பவத்தில் கொல்லப்பட்ட ஆயுத தாரிகளிடமிருந்து ரீ 56 ரக துப்பாக்கியொன்று கைப் பற்றப்பட்டதாக பொலிஸ் பேச் சாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மித் தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார். (த)

## உயர்தரப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாவட்ட பாடசாலைகளின் அதிபர்கள் பரீட்சை முடிவுகளை பரீட்சைத் திணைக்களத்தில் சென்று நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான பரீட்சை முடிவுகளும் பரீட்சைத் திணைக்களத்தினால் இன்றே தபாலில் சேர்க்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பரீட்சை முடிவுகளை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (www.donets.lk) 'இன்று மாலையே பார்வையிடமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என்று இரு பிரிவுகளாக நடைபெற்றதுடன் யாழ் மாவட்டத்தில் இந்த முறை முதல் தடவையாக பல பாடசாலைகளின் மாணவர்கள் ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ங-86)

## சனத்தொகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. இந்த வருடம் சனத்தொகை கணக்கெடுப்பு நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் முதல் இரு கட்டப் பணிகளும் முடிவடைந்துள்ளன.

மூன்றாவது இறுதியுமான ஆள்களை கணக்கெடுக்கும் சனத்தொகை கணக்கெடுப்பு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி முதல் மார்ச் 19 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது. மார்ச் 20 ஆம் திகதி இலங்கை அரசினால் தொகை மதிப்புத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மார்ச் 21, 22 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட கணக் கெடுப்புக்களை திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (த-15)

## பேச்சு மூலமாக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் கட்சி அதிக அக்கறை செலுத்துகிறது. இலங்கையர் ஒவ்வொருவரும் தாம் இந்த நாட்டின் சமத்துவமான குடிமக்கள் என்று உணரத்தக்க வகையில் கௌரவமானதும், நிலையானதுமான சமாதானத்தை நிலைநாட்டக் கூடிய பொன்னான வாய்ப்புக் கிடைத்துள்ள முக்கியமான சந்தர்ப்பம் இதுவென கட்சி கருதுகிறது.

அதன் காரணமாகவே - முஸ்லிம்களையும் இந்திய வம்சாவளித் தமிழர்களையும் உள்வாங்கியதாக சகல சமூகத்தவரின் தனிப்பட்ட அபிலாஷைகளையும் பிரதிபலிக்கத்தக்கதாக பன்முகத்தன்மை கொண்ட பேச்சே பயனளிக்கக்கூடியது என்று முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்துகின்ற போதிலும் - அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை ஆதரிக்க நேர்ந்திருக்கிறது.

போரை முடிவுக்குக் கொண்டு வந்துள்ள அரசு, பேச்சுகளின் ஊடாக சமாதானத்தை அடையும் சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது. அதேவேளை வெற்றிக் களிப்பில் தீர்வொன்றை முன்வைக்கவும் முற்படலாகாது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஓரளவு நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிப்பது அரசின் உண்மையான கரிசனையை அறிந்து கொள்வதற்கு உதவலாம்.

சுலோகங்களுக்கும், கோஷங்களுக்கும், தொகுதிவாரியான அழுத்தங்களுக்கும், கடினமான நிலைப்பாடுகளுக்கும் எதிராக நின்றுபிடிப்பது இலேசான காரியமல்ல. ஆயினும், உணர்வுபூர்வமான மனநிலைக்கு இடமளிக்காது நாட்டில் நிலையான சமாதானத்தை அடைய மக்களை வழிநடத்துவது இரு தரப்பினரும் கவனத்தில் கொள்ள வேண்டிய காலத்தின் தேவையாகும்.

பேச்சைப் பாதிக்கக்கூடிய கடினமானதும், இறுக்கமானதுமான நெருக்குதல்களுக்கு இலக்காகாது - தற்போது நிலவும் நல்லுறவைப் பேணி - பேச்சை முன்னெடுக்கக்கூடியவாறு நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்குமாறு அரசையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விநயமாக கேட்டுக் கொள்கிறது.

சமாதானத்தை நேசிக்கும் இலங்கை மக்களின் விமோசனத்திற்காக இரு தரப்பினரிடமும் காணப்படும் முதிர்ச்சியையும், அனுபவத்தையும் உகந்த முறையில் பயன்படுத்தி ஆக்கபூர்வமான உடன்பாடுகளை எட்டக்கூடிய விதத்தில் பேச்சுவார்த்தைகளைத் தொடருமாறும் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (உ)

## ஆராய்கிறோம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஐ.நாவுக்கான இலங்கை வதிவிடப்பிரதிநிதி பாலித கொஹன்ன தெரிவித்த நிலையில் நெர்சகியின் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட்டமையை வரவேற்றிருந்த ஐ.நா. பொதுச் செயலாளர், அதனைத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக ஒரு வாரத்தின் முன்னர் தெரிவித்திருந்தார். எனினும் இதுவரை அறிக்கை பற்றிய கருத்துக்கள் எதனையும் ஐ.நா. வெளியிடவில்லை.

இந்த நிலையில், கடந்த வெள்ளியன்று ஐ.நா. பேச்சாளரிடம் இது குறித்து 'இன்னர் சிற்றி பிரஸ்' செய்தியாளர் கேள்வி எழுப்பினார். உண்மையிலேயே ஐ.நா. அறிக்கையை ஆராய்கிறதா? அது தொடர்பில் ஐ.நா. கருத்து எதனையும் தெரிவித்துள்ளதா? என்று அவர் கேட்டார்.

பதிலளித்த பேச்சாளர், ''அந்த அறிக்கை ஆராயப்படுகின்றது என்று நாங்கள் சொன்னோம் என்றால் அது ஆராயப்படுகிறது தான். அதன் பின்னர் வேறு ஏதாவது இருந்தால் உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்'' என்றார்.

அதன் பின்னர் ஐ.நாவின் அதிகாரிகள் பலரிடம் விசாரித்ததில் ஐ.நாவின் அரசியல் விவகாரப் பிரிவு மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஆகியவற்றிடம் அறிக்கை கையளிக்கப்பட்டு அதன் சாராம்சத்தையும் அதில் இடம்பெற்றுள்ள ஏமாற்றுக்களையும் பொதுச் செயலாளர் பான் கீ-மூன் கேட்டுள்ளார் என்று 'இன்னர் சிற்றி பிரஸ்' தெரிவித்துள்ளது. (உ)

## நடுக்கடலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த ட்றோலரில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. அத்துடன் அசாதாரணமான கால நிலையாலும் மீனவர்களின் நிலை மேலும் மோசமானது. இதனால் தத்தளிக்கத் தொடங்கிய மீனவர்கள், ஒருவாறு நேற்றுமுன்தினம் வடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கேணி ஆழியவளைப் பகுதியில்கரையொதுங்கினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறைப் பொலிஸாரும், கடற்படையினரும் குறித்த மீனவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். இவர்கள் நீதிமன்றத்தில் நாளை ஆஜர் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கரையொதுங்கிய மீனவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

முருகன் தனேஸ், தங்கமணி சின்னையா, ஐயப்பன் மாணிக்கவேல், ஐயப்பன் ஆண்டியப்பன், இராசக்கண்ணு குழந்தைவேல், கண்ணப்பன் பரசுராமன். (ங-319-86-190)

## நடைமுறைச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள பதில் கடிதத்திலேயே சம்பந்தன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

தமிழ் மக்களின் ஒரு சில பிரச்சினை தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தாங்களும் இன்னும் சிலரும் அனுப்பிய கடிதத்திற்கு பதிலாக இந்தக்கடிதத்தை எழுதுகிறேன். அதிக வேலைப்பளு நிமித்தம் பதில் எழுதுவதில் ஏற்பபட்ட தாமதத்துக்காக வருந்துகிறேன்.

எனக்குக் கிடைக்கப்பெற்ற கடிதத்தில அநேகர் கையெழுத்தாளர்களாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் எவரும் அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டிருக்கவில்லை. எனினும் தங்களின் பெயர் முதன்மையாக இருந்தபடியினால் இந்தப் பதிலை தங்களுக்கு எழுத தீர்மானித்தேன். தாங்கள் அனுப்பிய கடிதமானது ஊடகங்களிலும் முக்கியத்துவம் பெற்றிருந்ததை அவதானித்தேன். எனவே இந்தப்பதில் கடித்தையும் ஊடகங்களுக்கு தெரியப்படுத்துவேன் என்பதை தங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

அரசுக்கும் எமக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இடம்பெறும் எல்லா விடயங்களையும் பொது மக்களுக்கு வெளியிடுவது சாத்தியமற்றதாகும். எனினும் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நடைமுறை சாத்தியமானதும் நிலையானதும் பெரும்பான்மையான எமது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியதுமான அரசியல் தீர்வை நோக்கியதாக எமது பேச்சு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

தங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் குறித்து தங்களோடும் ஏனையவர்களோடும் கலந்துரையாடுவதற்கு நாம் தயாராக உள்ளோம். - என்றுள்ளது. (த)

## கணக்கு வேலை தெரிந்தவர் தேவை

கணக்கு வேலை தெரிந்த சிங்களம் பேசக்கூடியவர் தேவை. தொடர்பு: 0771807672

வன்னிப் பகுதியில் 'உதயன்' வாசகர்களுக்காகச் சேவையாற்றி வருகிறது வன்னிப்பணிமனை. உங்கள் விளம்பரங்கள், செய்திகள் என்பவற்றைப் பிரசுரிக்க நாடுங்கள்...

**'உதயன்'**
வன்னிப் பணிமனை
(புனித தெரேசா பாடசாலை முன்பாக)
கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்

### கந்தையா பாலசிங்கம்



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் (22.12.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா-நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், நேசம்மாவின் அன்புக் கணவரும், கிசோக்குமார், உதயகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற குமுதினி மற்றும் உதயபாலன் (சுவிஸ்), ஜெயபாலன் (லண்டன்), அமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளினி (கனடா), ஜெயவாணி (சுவிஸ்), கலைவாணி (சுவிஸ்), சுஜாதா (லண்டன்), ராஜ்குமார், சண்முகநாதன் ஆகியோரின் மாமனும், பிரகாஸ், அவந்தியா (கனடா), உர்சலா, உர்சனா (சுவிஸ்), சுவனியா, லவனியா, சூரியா, ரிஸியா (சுவிஸ்), துர்க்கா, கம்சிகா (லண்டன்), லக்ஷன், லவன், லானுஜா, லக்சியா ஆகியோரின் அன்புப் பேரனும், அமிர்தநாயகி (ஜேர்மனி), ஆனந்தராஜா (கனடா), காலஞ்சென்றவர்களான அரசக்கோன், ஈஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கரெத்தினம், தியாகராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.12.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரபதி,
கந்தரோடை, சுன்னாகம். (12010)(5)

தகவல்:
குடும்பத்தினர்.

## புதுவருடத்தை முன்னிட்டு BARNABAS இன் மாபெரும் மலிவு விற்பனை

எமது அன்புக்கு இனிய வாடிக்கையாளருக்கு எமது இதயம் நிறைந்த நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள்

இம் மலிவு விற்பனை கையிருப்பு உள்ளவரை மட்டுமே

Mega Sale

All are New Ones




~~32500/=~~ 25500/=
~~26500/=~~ 20500/=

உதிரிப்பாகங்களை மிக இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்
நீண்டகாலம் உறுதியான பாவனை

SONY JAPAN T.V.கள்




~~21000/=~~ 14000/=




~~5700/=~~ 3750/=
*USB 5.1 Channel
*1Year Worrenty

~~2100/=~~ 1490/=
~~4500/=~~ 2400/=

247, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
T.P:- 0777448668, 0777805268, 0217900728

உறுதியான உத்தரவாதம் விற்பனைக்குப் பிந்திய அதிவேகமான சேவை எம்மிடம் மட்டுமே

## CHEMISTRY CENTRE

33, அராலி வீதி
ஓட்டுமடம்
சந்தியிலிருந்து 20 m

30.12 வெள்ளி
ஆரம்பமாகும் அனேக அலகுகள்

**INORGANIC**
Mon, Tue, Fri 6-7 p.m

**ORGANIC**
Mon, Tue, Fri 7-8 p.m.

**BASIC**
Tue 5-6p.m, Fri 3-4p.m.

**GENERAL**
Fri 4-6 p.m.

**CHEMISTRY CENTRE**
BRANCH இல்
(300, பலாலி வீதி, கந்தர்மடம்)

**A/L 2014**
ஆரம்பம்
தமிழ் மொழிமூலம்
31.12 சனி 4.30
ஆங்கில மொழிமூலம்
31.12 சனி 5.30

By: அன்பு
தொடர்பு:
0779037351

## மாபெரும் மலிவு விற்பனை

அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்!

(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)

| | | |
|---|---|---|
| இரும்புக்கட்டில் | ~~6,660/=~~ | 4,250/= |
| மரக்கட்டில் | ~~7,250/=~~ | 6,000/= |
| ஸ்ரீல் அலுமாரி | ~~18,500/=~~ | 11,250/= |



(மெத்தை (ARPICO), கணினி மேசை, கணினிக்கதிரை, றெசின் ரேபிள், சோக்கேஸ், அயன்ரேபிள், பிளாஸ்ரிக் கதிரைகள் மற்றும் அலுவலக, வீட்டுத் தளபாடங்கள்.)

தொடர்புகளுக்கு: 0773583879, 0212227892

## பாடசாலை உபகரண பொருள்கள் மொத்த விற்பனை

No.-01, No.-02 கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரண பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
0718617918 (11944)

குறிப்பு: பொருள்கள் உரிய இடங்களுக்குக் கொண்டுவந்து தரப்படும்.

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி, கல்பேட்ஸ் மற்றும் வான்கோழி, கினிக்கோழி, கோழிமுட்டை மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும்.
விவரங்களுக்கு: கிருஷ்ண பாம், மானிப்பாய், விதானைவளவு, மானிப்பாய்.
(11994)(5) தொ.பே.: 0772338084

## A/L - 2014

(கலை வர்த்தகப் பிரிவுகள்)

ஆரம்பம்:
ஜனவரி - 7
காலை 9.00 மணி

DMI
Jaffna

(C/7166)(5)

## வேலை வாய்ப்பு

"VEDIO EDITING"
செய்வதற்கு மூன்று வருடத்துக்கு குறையாத அனுபவம் உள்ளவர்கள் தேவை.

தொடர்பு:
0756411861

## நத்தார் விலை கழிவு + 10 வரப்பிரசாதங்களுடன் ஐஸ்கிறீம் இயந்திரம்

50,000/- மேல் மாத வருமானம்



- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

ஒரு வருட உத்தரவாதம்

விலை ரூ 99,000/- இல் இருந்து
புத்தம் புதியது

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 106 6902

## பணியாளர்கள் தேவை

1) கனரக வாகனச் சாரதிகள்
2) வாகன உதவியாளர்கள்
3) ஹாட்வெயர் விற்பனை நிலையத்துக்கு
இரும்பு விற்பனை வியாபாரத்தில் அனுபவமுள்ள பணியாளர்கள்

மேற்படி பணிநிலைகளுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு சுயவிவரக்கோவையை 31.12.2011 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல.: 4208,
மே/பா. உதயன்.

## COLLEGE OF CHEMISTRY

DIAS
2014 A/L
B.Sc (Hons) Spl in Chem

**ENGLISH MEDIUM**
Commences on 28.12.2011 at 4.30 p.m.

Parents should accompany for addmision

2014 A/L தமிழ் மொழிமூல வகுப்புக்கள் New Science College இல் 28.12.2011 அன்று ஆரம்பமாகிறது.
(11984)(5)

## NEW SCIENCE HALL இன் புதிய பரிணாமம் !!!

Kannathiddy
Jaffna.

முதல் முறையாக

A/L ICT
A/L GIT

புதிய வகுப்புக்கள் - 2014
மீட்டல் வகுப்புக்கள் - 2012
ஆரம்பம் 28-12-2011

அனுசரணை:-
TRANSITION

வெளி மாணவர்களுக்கும்!!!

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.